# டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை இடையே ஜனவரியில் மெட்ரோ ரெயில் போக்குவரத்து

## அடுத்த மாதம் சோதனை ஓட்டம்

சென்னை, நவ.25- தேனாம்பேட்டை (டி.எம்.எஸ்.) – வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரெயில் போக்குவரத்து ஜனவரி மாதம் தொடங்கப்பட உள்ளது. இதற்காக அடுத்த மாதம் சோதனை ஓட்டம் நடக்கிறது.

### மெட்ரோ ரெயில்

சென்னை வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரை முதல் வழித்தடத்திலும், சென்டிரல் முதல் பரங்கிமலை இடையே 2–வது வழித்தடத்திலும் மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் நடந்துவந்தது. இதில் 2–வது வழித்தடம் முற்றிலும் நிறைவடைந்து மெட்ரோ ரெயில் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

முதல் வழித்தடத்தில் தற்போது தேனாம்பேட்டை (டி.எம்.எஸ்.) வண்ணாரப்பேட்டை இடையே 10 கிலோ மீட்டர் தூரம் சுரங்கப்பாதை பணிகள் நிறைவடைந்துள்ளது. இந்த பாதையில் ஜனவரி மாதம் மெட்ரோ ரெயிலை இயக்க அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

### சோதனை ஓட்டம்

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

சென்னையில் 44 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் போக்குவரத்து திட்டத்தில் 34 கிலோ மீட்டர் தூரம் பணிகள் முடிவடைந்து ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள தேனாம்பேட்டை (ஏ.ஜி–டி.எம்.எஸ்.) வண்ணாரப்பேட்டை இடையே 10 கிலோ மீட்டர் தூரத்துக்கு சுரங்கப்பாதை மற்றும் ரெயில் நிலையங்கள் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துவிட்டன.

இந்த பாதையில் தற்போது சிக்னல்கள் அமைக்கும் பணி வேகமாக நடந்துவருகிறது. அடுத்த மாதம் முதல் வாரத்தில் டீசல் என்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. அடுத்த மாத இறுதியில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. ஆய்வு முடிந்த பிறகு, ஜனவரி முதல் பாதியில் ரெயில் போக்குவரத்து தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பு ஆணையருக்கு பணிகள் குறித்த ஆவணங்களை அனுப்பும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

### 7 ரெயில் நிலையங்கள்

ஏ.ஜி–டி.எம்.எஸ். ரெயில் நிலையத்தில் இருந்து புறப்படும் ரெயில் ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம், சென்டிரல், ஐகோர்ட்டு, மண்ணடி வழியாக வண்ணாரப்பேட்டை ரெயில் நிலையத்தை அடைகிறது. இந்த ரெயில் நிலையங்களில் கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்தப்பாதையில் ரெயில் போக்குவரத்து தொடங்கியதும் வண்ணாரப்பேட்டையில் இருந்து நேரடியாக விமான நிலையத்துக்கு பயணிக்க முடியும்.

லோயர், அப்பர் என்ற 2 அடுக்குகளை கொண்ட சென்டிரல் ரெயில் நிலையம் பயணிகளுக்கு பிரமிப்பை உருவாக்கும். சென்டிரல் ரெயில் நிலையத்தில் முதல் அடுக்கில் எழும்பூரில் இருந்துவரும் ரெயில்களும், 2–வது அடுக்கில் ஏ.ஜி–டி.எம்.எஸ். ரெயில் நிலையத்தில் இருந்துவரும் ரெயில்களும் நிற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

### விரிவாக்க பணிகள்

இந்த பாதை வண்ணாரப்பேட்டை, கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, சுங்கச்சாவடி, தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோ நகர் வரை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த 8 ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில் பாதை ரூ.3,770 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது.

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே அடுத்த ஆண்டு ஜூன் மாதம் மெட்ரோ ரெயில் இயக்கப்படும். இதன்மூலம் விம்கோ நகர் முதல் விமானநிலையம் வரை ரெயில்கள் இயங்கும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.